[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி கொடுக்கப் பட்டிருக்கிற கார்டுகள் அனைத்திற்கும் சர்க்கரையையும் வழங்கு வதற்கு சிறப்பு ஆணை வழங்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு சர்க்கரையும் வழங்கப்படுவதற்கு உரிமம் இருக்கிறது.

காமக்கப்பட்டியருகே சோதனைச்சாவடி.

*528 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக-கேரள எல்லையில் உள்ள காமக்கப்பட்டிக்கு அருகில் உணவு தானியச் சோதனைச்சாவடி ஏற்படுத்தப்பட் டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதை பேரிஜம் என்ற இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, பொதுவாக, கேரள எல்லைபோன்று இம்மாதிரியான இடங்களில் செக் போஸ்டுகள் அமைக்கப்படுவதாகவும், இதனால், அவற்றிற்கு இடையிலே உள்ள கிராமங்களில் விலை உயர்ந்து, அரிசி அவ்விலையில் விற்கப்படுவதாக வும் கேள்விப்பட்டதால்தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக் கிறேன். அதை விசாரித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விப்பட்டதைச் சொல்கிறார்கள். இப் பொழுது அங்கெல்லாம் செக் போஸ்ட் இல்லை. முன்பு லெவி போட்ட காரணத்தாலே காமக்கப்பட்டிக்குப் போகிற வழியிலே செக் போஸ்டுகள் இருந்தன. இப்பொழுது அவைகளெல்லாம் இல்லை.